உ

வேலுமயிலுந் துணை.

புலவர்கள் புகழப்பெற்ற

முத்தமிழ் க்ஷேத்திர

மதுர

பாஸ்காதாஸ் அவர்கள்

இயற்றிய

புதிய பெரிய

பக்திரஸ கீர்த்தனங்கள்.

இ. இராமசாமிக்கோன்

பப்ளிஷர், புக்ஸெல்லர் & ரப்பர் ஸ்டாம்ப் மேக்கர்,

வடக்காவணிமூலவீதி, மதுரை.

விலை] 1919. [அணா 5.

Registered Copy Right.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை—19.

உ

வேலுமயிலுந் துணை.

புலவர்கள் புகழப்பெற்ற

மூத்தமிழ் க்ஷேத்திர மதுர

பாஸ்கரதாஸ் அவர்கள்

இயற்றிய புதிய பெரிய

பக்திரஸகீர்த்தனங்கள்.

விருதுமாநகர், கோட்டைப்பட்டி ஜமீந்தார்

இரவிகுலதிலக சீலஸ்ரீ ராமமூர்த்தி நாயகர்

அவர்கள் விருப்பத்தின்பேரில்

மதுரை வடக்காவணி மூலவீதி

இ. இராமசாமிக் கோனாரால்,

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1919.

விலை] [அணா-5.

Registered Copy Right.



2

உ

வேலுமயிலுந் துணை.

மூத்தமிழ்க்ஷேத்திர

மதுர

பாஸ்கரதாஸரவர்கள்

இயற்றிய புதிய பெரிய

பக்திரஸ கீர்த்தனங்கள்.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

மாவளருந் தேன்மதுர மாமுகவன் மாபதத்திற்
பாவளரும் நற்கீதம் பாடுதற்கு—காவளரு
மிந்திரர்க்காய்க் கும்பமுனி யின்கரக நீர்கவிழ்த்த
சுந்தரத்தா ளிங்கண் துணை.

விருத்தம்.

மஞ்சாருந் திருமாலு மலரயனு மறைநாலும் வருந்தித்தேடு
மஞ்சாருஞ் செஞ்சடையின் மதிகடுக்கைமிலைந்தமழு வாருமஞ்சு
மஞ்சாருந் திரள்புயமு மதகளிற்றின் புகர்முகமு மருப்பும்வாயு
மஞ்சாருங் கரமலரு முடையான்றன் மலரடிகண்மனத்துள் வைப்
[பாம்.

3. இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா கஜமுகனே நீ வரமருள (வா)

அநுபல்லவி.

வாகாய்ச் சிறுவன்நேரில் ஆகுவாகனமேறி (வா)

சரணங்கள்.

காவா கருணைமொழி தாவா தருணமிது
தேவாகண் பாராயோ நாவாற்புகழ் கூறுயோ
நத்தினேனே நித்தமுனை யுத்தமனே பத்தன்முனே (வா)

தக்கன் தவமடித்த முக்கண் ரதமொடித்த
சக்ராயுதக் கையோனே துக்கமறச் செய்கோனே
சுந்தரனை முந்தவலம் வந்தவனே இந்தவேளை (வா)

அவ்வை மனமகிழச் செவ்வையுடன் கைலை
எவ்வியேறச் செய்தோனே தெய்வங்குரு நீதானே
தேடியுனைப்பாஸ்கரனும் பாடினேன் நல்வாக்கருள (வா)

4. சித்தம் சுத்தமதடைய என்ற வர்ணமெட்டு.
இராகம்-இங்கிலீஷ் நோட்-தாளம்-ஏகம்.

பல்லவி.

சத்திக்கணபதி நீயே சித்திக்குண நிதி நேயே
பத்தன்ஒருவர மீயே பரமனருள் சேயே

பாஜாங்குஜஜதர மூஷிகனே சுரர்
பண்பொடு பனிமலர் தூரி
நம்பிடு முனிவர்கள் நேரில்
பரிசுத்தம் பெற வித்தம்
பரிவொடு பெருகி யமரர் துதி (சத்தி)

மூத்தமி ழுடைவினை யன்றே முற்படு கிரிமிசைநின்றே
மெய்ப்புறவெழுதியகன்றே மிருப்பவவினைகொன்றே
மெத்தவே நத்தினே னித்தருணத்தினில்
மேதினியோர் கொண்டாட
ஓதினியானும் பாட
வித்தகனே மத்தகனே
விரைந்தருள் பாஸ்கரனெதிரினில் (சத்தி)

---

5. சரஸ்வதி துதி.

விருத்தம்.

திருமருவு கமலமிசை யானந்த மாகநிறை
தேவிசெம்பொன்
தருமருவு நன்மொழிக ளென்னுவி லனுதினமுஞ்
சாற்றற்கன்பா
யுருமருவு குணக்கான சங்கீத, வீணைகர
மோங்குமின்பக்
கருணைபொழி கயல்விழியாள் கண்டுமொழிக்
கலைமகளைக் கருத்துள்வைப்பாம்.

---

6. இராகம்-சிந்துபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னைவாணியா னுன்னையேபணிந்தேனுதரி
நன்னயமாயென் னுவிருந்தருள் தயாபரி (அ)

அநுபல்லவி.

அன்னவாகனமீதி லமர்ந்திடுங் கெம்பீரி நாரி
அஞ்சலிசெய்தேனுன் றனையே
சஞ்சலமேறு தென் றனையே
தஞ்சமெனக் காவா யினியே
அன்புடன் பணிந்தே னுதரி (அன்)

சரணங்கள்.

அந்தரிதம் பூரதைக் கரந்தரித் தயன் மகிழும்
அங்குறு தீங்குரலோசை யினால்
எங்கினு மாதவ ராசை யினால்
தங்கிட நாளரு பூஜை யினால்
ஆத்திரமாய்ச் சாத்திரமே
பூர்த்திபெறத் தோத்திரமே
ஆசுகவிக் கடல்வாசன் பாஸ்கர
தாசன் தமிழதையே முப்பொழுதிலும்
ஆனந்தப் பாமாலை யாய்த்தாரி (அன்னை)

காமனைப் பயின்றவா கடலினில் துயின்றவா
கோமகன் சிறைதவிர்த்தகொற்றவாகோதண்டனே(சாம)
பூமகள் நாதனே புவிபுகழ் வேதனே
க்ஷேமமருளும் ஜெயகீதனே தினம் துதித்தேன் (சாம
மாமதுரிதப்பூமி மைந்தன் பாஸ்கர சாமி
மனமதி லனுதினமுங்தேமி வணங்கி நின்றேன் (சாம)

---

13. இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-சாப்பு.

பல்லவி.

திருமால் சகோதரி தேவி மகோதரி
வரமேதந் தாதரி வாவா சடாதரி(திரு)

அநுபல்லவி.

கரமழு சிறுமான் பிறையணி பெருமான்
புரமணந் தருமா காரணியே
காக்ஷி யானதொரு மாக்ஷிதானுறுமீ
ஞக்ஷிஞானமருள் பூரணியே(திரு)
மரகதவுருவே பரகதி தரவே
வரதபமுளரே தெரிபவளே
மாசில்லாதபர மேசனேடுபிர
காசமாக நடம் புரிபவளே(திரு)
இகபர சுகமே புகவுரை ஜெகமே
மிகநிறை யகமே இருவிழியே

ஏற்றி யுன்றனடி சாற்று மென்றன் மிடி
மாற்றிச் சந்தத மங் திரமொழியே (திரு)
மகபதி குலமே திகழ்துதி பலமே
பகவதி நலமே மகிழ் பேணி
மாமது ரங்கமழ் பூமனும் பாஸ்கர
சாமி செந்தமிழ் புகழ் ராணி (திரு)

14. ஸ்ரீ முருகபிரான் துதி.

விருத்தம்.

சின்மய மாகி யெங்குந் தேடரும் பொருளதாகிப்
புன்மலங் கடந்த யோகர் போற்றிடும் புனிதனுகி
நன்னுதல் வள்ளிதெய்வ குஞ்சரி மருவு நண்பன்
மன்னுசெங் கரத்துவேலே வணங்குவ தெனக்கு வேலே

15. இராகம்-தேசிக-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேலனே இந்த வீணனை யேன் படைத்தாய்-மாய
விலைமாதர்க ளிடுமாய்கையிற் படுமானிட மூடனுகிய
வீணனை யேன் படைத்தாய் (வே)

அநுபல்லவி.

நாளுமுனைத்துதி யாது மதங்கொண்டு
நலமாயுடல் சதமாமென மொழிமானிட மூடனுகிய
வீணனை யேன் படைத்தாய் (வே)

சரணங்கள்.

கைப்பொருளாசை கனவிலும் நினைந்து
மெய்ப்பொருளே யுனை வேண்டாமல் மறந்து
எப்போது முன்றன் அடியாரைச் சினந்து
இடறேபுரிந்திடவேநினைந்திடுமானிடமூடனாகிய
வீணனை யேன் படைத்தாய் (வே)
சிந்தையிற் பாஸ்கரன் செந்தமிழ்ப் பாடியே
சந்ததமுன் பாதஞ் சாற்றும லோடியே
பந்துஜனஞ் சுற்றத் தாருறவாடியே
படுமாகர கடைவோனெனுங் கெடுமானிடமூடனாகிய
வீணனை யேன் படைத்தாய் (வே)

---

16. சோமசுந்தரக் கடவுள் துதி.

தகதகெனஜோதிதருந் திருமதுரை தனில் வளரும்
ஸ்வாமியுன் விமான மழகுந்
தங்கத்த ருங்கையொடு மங்காத தூவியும்
சந்திரன் றன்னை யிகழும்
செகமுழுவ தாம்வெகுவி நோதமாய்ச் சொல்கின்ற
தேவிசந் நிதியி னழகுந்
திருமதில்கள் வாவியும் பலாமரச் சோலையுந்
திகைத்திடு விசித்ர வகையும்
புகமுழுகி ஞுமே அழியாத கோபுரம்
ஒருநான்கு வாயிலழகும்

உறுதியா யானுன்றன் கோவிலழகுஞ் செப்ப
ஒருநாவு தான் போதுமோ
சுகதுரிய வடிவமாய் நடனமாடிய தேவ
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ் துதிகொள்
சோமசுந்தரக் கடவுளே.

---

17. இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்றுளாடியவா ஈசா மன்றுளாடியவா
அன்றுவெள்ளியம்பலத்தில் தொண்டர்கள் துயரமகற்றிட

அநுபல்லவி,

கன்றுமானைக் கரத்தில் தரித்தவா
கங்கையோடு சடையை விரித்தவா
பண்டுமுப்புரந் தன்னை யெரித்தவா
பதஞ்சலி முனிவர்கள் தொழவே
ததிங்கிண தைத்தோ மெனவே (மன்)
மண்சுமந்து பிரம்படி கொண்டவா
வாணுபச்சிபிட்டைவாங்கியேயுண்டவா
கண்ணப்பனீந்தக றிச்சுவைகண்டவா
காளாஸ்திரி யீஸ்பரனே
ஆலமுண்ட செவ்வாயனே (மன்)

மலையத்துவஜ பாண்டியனுக்குநல்
மருகனாய் வந்த திரு அவதாரா
வளையல்விற்றிட வைசியனாய்வந்த
வரகுணன் காணவே மூந்த
பரலோக தரிசனந் தந்த (மன்று)

வாடியநாரைக்கு முத்தியைத்தந்தவா
வாதவூரடிகளை யாளாக்கிவந்தவா
பாடியபாஸ்கரன் பாடற்குகந்தவா
பண்ணவர் முனிவர்க ளாடக்
கண்ணயன் தாளம் போட (மன்று)

தாயுமான சுவாமிகள் துதி.

அச்சாமேரி லாகீச என்ற வர்ணமெட்டு.

18. இராகம்-இந்துஸ்தான் தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சர்ஜனர்கள் கொண்டாடுந் தாயுமான சுவாமியே
சுவாமியே எங்கள் சுவாமியே(சர்)

அநுபல்லவி.

அர்ஜனைகள் செய்தோமே அருள்புரியென்றுய்தோமே
ஆகூலம் போகவே வாகுடன் செய் நேமியே (சர்)
பொற்சிகர மேதுலங்கும் நற்றிரிசை மலை விளங்கும்
புண்யாகா ருண்யாகின் பூவடியைப் போற்றினேன் (சர்)

அன்பாய்ச் சுகந்தகுந்த எம்பாள் தமக்கிசைந்த
அய்யனே மெய்யனே ஆதரிப்பாய் துய்யனே
பக்தர்கள்நிறைந்த திருப் பாண்டியிற்சிறந்த தொரு
பாஸ்கர சாமிக்குன் வாக்கருளப் பாடினேன் (சர்)

---

19. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

குரு-வானவா வாருந் தாயுமானவா
வந்தமரர்களுந்தினந்தொழு குந்திரிசையமர்ந்திடுங்குரு ()
ஞானமறை முனிவர் நம்புங்கர மழுவார்
நாதனேகுணநீதனேமலர்ப்பாதனேவரத்தீதென்னகுரு ()
கானமலர்க்குழல்சு கந்தகுந்தாள் பவிசு
காரணஜெகத் தாரணகரித் தோரணபரி பூரணகுரு ()
மோனவழிதெரிந்து மூவாசையைத் துறந்து
மோகமற்றுநின் பாகமுற்றிட யோகநற்றவ சாகரக்குரு()
தேன்மதுரிதப்பூமி சேயன்பாஸ்கரசாமி
செந்தமிழ்க்கரு ளெந்தநேரமும் வந்தளித்திடுந் தந்தைதாய்குரு()

---

20. சிவசுப்பிரமணியர் துதி.

விருத்தம்.

பூர்வீக ஜெனனமுத லிப்பிறவி முடிவுவரை
போதும் நான் பட்ட துன்பம்

பொல்லாத தெத்தனை கல்லாத தெத்தனை
பூதஜென்மங்க ளுற்றேன்
சீர்மிகும் நினதுசெந் தாமலரப் பதமதைச்
சேவிக்கும் அடியார்களைத்
தெரிசனஞ் செய்தனோ செய்யாதிருந்தனோ
செய்திருந்தாற் பிறவியேன்
ஆரிருந் தென்னமுன் பின்துன்பம் நீங்கவே
அருள்புரிவதற் குனையலால்
அண்டருலக கத்திலும் பூமண்ட லத்திலும்
அதலசுத லத்திலு மிலை
தார்மிகுஞ் சூரசங் காரமயில் வீரனே
தமியன் பாஸ்கரனை யாளாய்
சரவணையி லேபிறந் தருவுருவ மாய்வரந்
தருபரங் கிரிக் கந்தனே.

தேக்குங்கி மோரா என்ற வர்ணமெட்டு.

21. இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலவா எனை யாளாயித் தருணம்
வேலவா வடி வேலவா வடி (வேல)

அநுபல்லவி.

ஆலமே புசித்த அரன் தவத்துதித்த
அறுமுகனேயுனை அண்டினேனருள்
அந்தர சேனாதிபனே (வேல)

மாலருள்சுதனை மதிவரப்புடைத்தினை
மயிலேறி நடமிடு மாமல ரடி
மைந்தனுக்கருளும் வடி (வேல)

காலனை யுதைத்த நீலனுக்குரைத்த
கரியமால் மருகனே காவையாபுரிக்
கந்தனே சந்ததம் வடி (வேல)

சேலினைப்பழித்த திருவிழி யுடைத்த
தெய்வகுஞ்சரி லோலா தேடிப்பாஸ்கரன்
செந்தமிழ்ப் பாடினேன் வடி (வேல)

இந்தவுடலைநம்பி என்ற வர்ணமெட்டு.

22. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

அண்டர் பணியுந்தண்ட பாணித்தெய்வமே
தொண்டரணியக்கொண்ட வேணிச்சைவமே
அன்புடனுன்னைப்பாடி நம்பினேன் மனங்கூடி
தென்பழனி வாழ்தண்ட பாணித்தெய்வமே (அண்)

தண்டினிதழ் நெருங்கும் தடங்காதமே
வண்டினமதிலுண்டு செய்யுங் கீதமே
தாவிடுஞ் சினவாளை மேவிடுஞ் சொன்னப்பாளை
யேவிடப்பாயும்வேளை நாரை வாதமே (அண்)

அந்திசந்தியிற் செய்யு மலங்காரமே
பந்திபந்தியாய்ப் பக்தர் பணிவாரமே
ஆனந்தமிகக் கொண்டு மோனவழியைக்கண்டு
ஞானம்பெறுவதுண்டங் கந்தநேரமே (அண்)

சந்திரனொளிமேவுந் தங்கஸ்தம்பமே
இந்திரனூரைத்தாவுங் கொடிக்கம்பமே
சாற்றும்பாஸ்கரன்கண்டேன் ஏற்றியென்சிரங்கொண்டேன்
போற்றியே வரமுண்டேன் பூர்வத்தின்பமே (அண்)

மாத்தாடபாரதேனே என்ற வர்ணமெட்டு.

23. இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி,

கார்த்திகேயக் குமரையா காத்தருள் மெய்யா (கார்)

அநுபல்லவி.

கோர்த்த கடப்பணியுங் குகனே பன்னிருகையா (கார்)

சரணங்கள்.

பார்த்திபன் மைத்துனர்க்குப் பக்ஷமுள்ள மருகா
பூர்த்திபெறநின்பாதம் போற்றினேனே முருகா
புகலரிய பிரணவ முறையையரன்
திகழ்செவியி லறிந்திடவை குருபர
போகனே தெய்வ பாகனே தவ
யோகனே மயில் வாகனே திரு (கார்)

நாற்றிசையும் நிறம்பும் நாரதராலியம்பும்
மாற்றறியாப் பசும்பொன் மாதுகுறமின் நம்பும்

மதுரிதமே கமழ் மகபதியின் குல
மதுநிறையத் தமிழது பொழியும்புகழ்
மைந்தன் பாஸ்கரன் செந்தமிழ்க்கருள்
இந்தநேரமுந்தந்த கந்தனே (கார்)

ஆஜாஜனிஆஜா என்ற வர்ணமெட்டு.

24. இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வடிவேலா வடிவேலா வரந்தருகுவாய் (வடி)

அநுபல்லவி.

அடியேன் படுந் துயரற்றிடச் செய்குவாய் (வடி)

சரணங்கள்.

படிமீதினிற் கொடிய பாவியானேனே
பண்டுறு தீவினை தானே (வடி)

சூரசம்மாரகுகா சுருதிக்குரியமகா
தொண்டர்க் கருளுறு முகா (வடி)

மாரன்மைத்துனஉன்றன் மகிமையெவரறிவார்
மைந்தனையாண்ட ருளுவாய் (வடி)

பூரணவள்ளிமயிற் போதகுருநாதனே
போற்றும் பாஸ்கர கீதனே (வடி)

மாமயிலேலே மருவ என்ற வர்ணமெட்டு.

25. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி

பல்லவி.

சோமசேகரனருளும் பாலா வேலா தோகை
மாமயில்மீதேறிவரும் கோலா காலா சாமி (சோ)

காமியராசையாலுடல் வாடினேனே உன்றன்
நாமமதையேதொழுது பாடினேனே கானிற்
பூமணக்குறவள்ளியைக் கூடினோனே இனித்
தாமதஞ்செய்யாமல்வா சீமானேகோனே சாமி(சோ)

அமரர்கள் சிறைதவிர்க்க அன்று அன்று அன்னை
யாமுமையிடம்விரைந்து சென்று சென்று வேலை
யரியசெங்கரத்தடைந்து நின்று நின்று வந்த
அசுரரைக்கருவறுத்தாய் வென்று வென்று சாமி(சோ)

அந்தரத்தோர்கள்பணியும் நீதாகீதா ஞானந்
தந்தைக்குபதேசித்தகுரு நாதாபோதா உன்றன்
சிந்தையிரங்காததென்ன வாதாசூதா இனிச்
சேயனுக்குற்றவன்நீதான் மாதாபிதா சாமி(சோ)

பாண்டிநகர்தன்னிலேபன் னளாய்நாளாய்-வாழும்
பாலன்பாஸ்கரன்முறையைக் கேளாய்கேளாய்-உனை
வேண்டியேதுதித்தேன்யானின் ஆளாய்ஆளாய்-முன்
வினையனைத்துந்தீர்த்திங்கென்னையாளாய்ஆளாய் -சாமி(சோ)

சீராய்த் தந்தை தந்த படந்தனை என்ற வர்ணமெட்டு.

26. இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தா வந்தா ளுந்தார் விந்தா
கரிமுகனிளையநல் லறுமுக சரவண (கந்தா)

அநுபல்லவி.

சந்தோஷந் தானுந்தே வந்தேன்
சமரிடைபடுநெடு மயிலுட நடமிடு (கந்தா)

சரணங்கள்.

இந்திராதிதேவர்களின் இன்னலறக்காத்தவனே
சந்திரசடாதரனின் சந்தேகந்தீர்த்தவனே
என்பாவந்தீருன்பாதஞ் சேர்
இறப்பையும் பிறப்பையும் துறப்பதின் சிறப்பருள் (கந்)

வண்டாருந் தீம்புனத்தே வள்ளியிடஞ் சென்றவனே
பண்டார வேடமுடன் பாகமுதுதின்றவனே
வாதாடித்தரு நீர்தேடித்திரு
மணம்புரிந்தவளுடன் குணம் பொருந்தி யமரும் (கந்)

தொண்டாடும் மாமதுரக் கோமகனின் சந்ததியே
தெண்டாயுதாநின்புகழ் செப்பும் பாஸ்கரன் துதியே
கூடியே கொண் டாடியே யென்
குருபரங்கிரி யிருந் திருவரை மருவிடும் (கந்)

வஸ்லமேதல்கபி என்ற வர்ணமெட்டு.

27. இராகம்-இந்துஸ்தான்-கவாய்-அடதாளம்-சாப்பு.

மலைமகள் மைந்தனே மயிலேறியென்முன் வாராயோ
சிலைமதன் மைத்துனா சிறியேனென் துயர் தீராயோ (மலை)

கலைமகள் நாதனை முன் கதறவேதான் சிறையில்
நிலைமையாய் வைத்தவா நெறிமாமறை நூல் கூறுயோ (மலை)

அலைகடல் மீதிலே நின்ற அசுரரையோர் நொடியிற்
பலமுடன் வென்றவா பணிந்தேனெனைக்கண்பாராயோ(மலை)

குறமகள் மாதிடத்திற் குணமதா யேகியேநற்
றிருமணங் கொண்டவா திருத்தாளிணைப்பூத் தாராயோ(மலை)

மருமலர் சூழ்புவியில் மாமதுராபுரியில்
அருள்மிகும் பாஸ்கரன் அடைந்தேனுன் சரண் ஆராயோ ()

அலைசேர் கடல்சூ ழுலகில் என்ற வர்ணமெட்டு.

28. இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

அரனார் திருமா நுதலின் அனலாய் வரு குருமணியே
ஆறுமுகத்துட னேரிலெனக் கருளே தரவினியே (அர)

அநுபல்லவி.

அரியோர்உரியோர் பெரியோர்க்கருள் தரும்பரங்கிரி யுறைபவ
அடியவர்படு மிடியதையறுத் திடவிடமதை யுணும்பரசிவ ()

சரணங்கள்.

அருமறை முடிவதை யுரையென
விரிவுடனதையறிந் திலையென
அக்கணமங்கயனயர்வுற மிக்கசிறைக்கணடைத்தவா
திறமுடன்வரு மசுரர்கள்படை ஒருநொடிதனி லுயிரதுகெட
சித்தினி யிடத்தினிற் கிடைத்தவே
லெடுத்ததை விடுத்துயிர் வதைத்தவனே (அர)

திரிபுரந்திரி நாரதர் சொன்ன
குறமகளைக்கண்டிட முன்னம்
தெரிவனந்தனில் வேடனென்னும்
உருவதையெடுத் தவனிடமேவி வன்னத்
தேனுடன்மாவைப் புசித்தீர் மான அவ்விடம் வசித்தீ
ரானைமுகனைப் பூசித்தீர் மான்மக ளைநேசித்தீர் (அர)

அருநடமிடு மயில்முருகனே அரிமன மதுமகிழ் மருகனே
அங்குமிங்குமற எங்கும் நிறைந்தது மங்கைவளர்த்தவனே
திருமதுரையி லுறைகுருபர திருவடியதை யிருகரங்குவி
திண்ணமார் பாஸ்கரசாமி வண்ண முத்தமிழைத்தேமி
பண்ணாலே துதித்தேன் ராமி. (அர)

29. ஆசிரியவிருத்தம்.

வானவர்க் கதிபதியெ னப்பெரிய பெயர்பெற்று
வஞ்சகச் சூரர்செய்யும்
வன் கொடுமை நீக்கியே தன்பதியிற் றேவர்கள்
வாழ்ந்திடக் கருணை செய்தாய்
மோனவித் தைப்பொதிகை வரைநடுவில் வளருகுரு
முனிவர்க் குரைத்து வைத்தாய்
முனைபெற்ற வேல்கொண்டு வினைசெய்த கிரவுஞ்சன்
முப்பிளவு படவெ றிந்தாய்
கானமேவிய வள்ளி குஞ்சரி சமேதயென்
கவலையைத் தீர்ப்ப தரிதோ
கந்தா சதாசிவா செந்தாமரைப்பாத
கமலனே விமலன் மகனே
தானங்கள் பலசெய்துங் காணாத தெரிசனந்
தந்து பாஸ்கரனை யாளாய்
சரவணையி லேபிறந் தருவுருவ மாய்வரந்
தருபரங்கிரிக் கந்தனே.

அன்னமே நான் என்ன செய்குவேன் என்ற வர்ணமெட்டு.

30. இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வேலவாநின் தாளிணையை வேண்டி மிகவும்
விரும்பிடவரந் தரும்பரங்கிரி (வேல)

அநுபல்லவி.

காலகாலன்றன்னை யுதைத்த
கருணாகரப் பொருளாகிய கர்த்தனருளுஞ் சித்தனே ஞான()

சரணங்கள்.

சிந்தைநொந்து சிந்தித்துமென்
தீவினை தீராத தென்னநாய மேதுகுறை
செய்தபோதும் வையகமீதிற்
றிருநடமிடு வருணமயில்மீ தொருநொடிவந்து வரமதுபுரி ()

தீரவீர சூரரைச் சமர்
திறமுடன் செய்து தேவர்களைக் காத்திடுமா
சேவகாவுனை மேவித்துதித்தேன்
திரிபுர சுந்தரி தந்த பரிவொடு தேவர்புகழ்ந்த(வே)

பாண்டி நகர் தன்னில் வாழும் பாலன் பாஸ்கர
சாமிக்கருள் நேமித்திட
ஆண்டியென்ற நாமம்பூண்ட
ஆறுமுகா வேறு துணை யாரறியேன் பாரினிலே(வே)

தேறிமேறி என்ற வர்ணமெட்டு.

31. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி,

பாடிப்பாடி யுன்பாதத்தைக் காணேனே செய்யும்
பக்திவிதந் தோணேனே நான் (பா)

அநுபல்லவி.

ஆடும்பொன்னம்பலத்தான் கண்ணுதலே மனங்
தேடுமென்னைம்புலத்தா லெண்ணுதலே எனக்
காதரவினி யுனையல்லாது வேறேது
நீயோது பேசாத தாகாது
அன்னைகுற வள்ளிமோகமோ யீது-நின்
அடிமையென்றறியார் சூது போதும் (பா)

வேடிக்கை பார்க்கவோ வேலணிந்தாய்-ஆண்டி
வேடம்பூண்டேய்க்கவல்லோ துணிந்தாய்-உன்னை
விடுவேனெனவே நீயெண்ணாதே என்வாதே
யுன் மீதே இப்போதே மாண்பீதே
வேதப்பிரியாது செப்வேன் தப்பாதே வர
வேணுந் தடை செப்பாதே நாதா (பா)

பேடிக்குத்தூதுசென்றோன் மருகோனே - சூரர்
வாடித் துடிக்கவென்ற முருகோனே கூறும்
பெருமித முத்தமிழின் பூமி வாழ்நேமி
பேர்கோமகன் தாமீயுஞ் சேமி
பேதமுறுப் பாதமறித் தேயிப்
பேணினேன் பாஸ்கர சாமி தினம் (பா)

மேரேசையாஜமுனுமே என்ற வர்ணமெட்டு.

32. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரிமருகா வுனை நம்பினேன் யான் (அரி)

அநுபல்லவி.

திருமுருகாகுகா தெய்வானை வள்ளிசுகா
சேயனெனை யாளித் தருணமே (அரி)

வேண்டியே மண்ணுளோர் விண்ணுலகோர் தொழும்
வேலவனே யாளித் தருணமே (அரி)

ஆலவிஷ முண்டிடும் ஐயனுரீந்திடும்
அறுமுகனே யாளித் தருணமே (அரி)

தென்பரங் குன்றினில் இன்பமதாயுறும்
தேவர் கோனேயாளித் தருணமே (அரி)

பாண்டி நகரினில்வாழ் பாலன்பாஸ்கரன்தமிழ்ப்
பாடினனேயாளித் தருணமே (அரி)

---

33. இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்

பல்லவி.

செந்தூர்வாசா மைந்தனைக்கண்பாரையா
சிறியேனுனையே மறவேன் மெய்யா(செ)

அநுபல்லவி.

அந்தணர் முதல் அமரர்களும்
அறுமுக குருபர வுனதடி யனுதினந் துதிபுரிந் திடுதிருச் ()

சரணங்கள்.

திறளுறமொடுவரு மவுணர்கள்படைகரி பரி குடைரதமதைக்
கிறுகிறுவெனப்பொடிபடவுடல்பறபறவெனத்தரையிழுபடச்
சிரமதை நறுநறுவென அறுத்தரை நொடிதனி லெமனுலகுற
சேர்த்து நேர்த்தி யான தெய்வமாமகளைக்
கீர்த்திபெறச் சேர்த்தணைத்த பெருமாளே
தினையதிலருங்கவ ணெறிவிடும் அணங்குற விளங்குயி லழகிய
தனமதிலிருவிழி சொருகிட மனமுருகியே மகிழ்பெருகிட
வனமீதிலவளுட னெதிரிடக்கணமதி லேழுபேகு மெதிர்பட
வருத்தமிகுத்து மரத்தைநிகர்த்தாய்
கரித்தோலுரித்து விரித்தோர்க்குரைத்தாய்
செறிமலர்சூழ் கிரிமுழுதாள்
செஞ்சேவற் கொடிசிகிவாழ்
சித்தஜன் மைத்துன முத்தமிழ்
வித்துவ பாஸ்கரனுக் கருள் (செந்)

கியா கியா ஹோா என்ற வர்ணமெட்டு.

34. இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி

பல்லவி.

வேலனே மாதுமை பாலனே சீலனே
கோலனே வேதமா மூலனே கூலனே(வே)

அந்தரர் போற்றிடுஞ் சுந்தரா கந்தனே
சந்ததஞ் சாற்றினேன் சங்கரன்மைந்தனே
சாதுமறை போதகுற மாதுநிறை நாதனே (வே)

இந்திரன் கோரவே தொந்தரை தீரவே
தந்திரசூரவே ரந்திட நேரவே
சற்றுமயராதவகை வெற்றிபெறு மால்மருகா (வே)

சிந்தையில் பாஸ்கரன் செந்தமிழ்த்தோத்திரம்
சொந்தமாய் நோக்கியே வந்தருள் சீக்கிரம்
தென்பரங்குன்றன்பனே உம்றன் பதமேநம்பினேன் (வே)

மேரேதர்தேஜிகர்கி என்ற வர்ணமெட்டு.

35. இராகம்-பின்முடுகு-சிந்துபைரவி-தாளம்-ஆதி

பல்லவி.

திருக்கூத்தாடி மகனே சீராறுமுகனே (திரு)

அநுபல்லவி.

சீராறு முகனே வாராய்முன் குகனே (திரு)

சரணங்கள்.

கோர்த்த கடம்ப தேகா
குறத்திமணந்த வாகா
பார்த்திபன் மைத்துனமால்
பக்ஷமருகா யோகா (கூத்தா)

கார்த்திகேயக் குமரா
காரவுணர் சமரா
நேர்த்திமயி லின்வீரா
நேசப்புனத்தி மாரா
கனவிலுமெனதக
நினைவிலுமுனையனு
தினந்துதி புரிந்திட
மனமகிழ்ந் தருள்புரி (கூத்தா)

தொகையறா.

தேவரோடு மூவர்நீடு மேவு கூடல்
தாவுகந்த தீரா
சேவலோடு பூவில்நாடு மாவல்தேடு
காவலா சிங்காரா
தேன்மதுரிதமணங்கமழ்
மொழி பாஸ்கரன்
பரமகிழ்ந் தெதிரில்வந்
தருள்புரி சீக்கிரம்
சித்தரும் முத்தரும்
பத்தரும் நத்திய
திருநதியும் சிறுமதியும்
அரவணியும் பெறவிரி
சடைமுடியுடன் (கூத்தா)

———

சந்த்ராசரச மதலோலாஎன்ற வர்ணமெட்டு.

36. இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி

கண்ணிகள்.

திருச்-செந்தூர் வளரு முருகோனே நின்
திருவடி பணிந்தேனேசீமானே
செய்குவாய் அருள் தானே
திருமால் மருகோனே (செ)

சாமி-நந்திவாகன னருள்பாலா உனே
நம்பினேன் நெடுநாளாய் உன்னுளாய்
நவிலரு முறைகேளாய்
நளின மலர்த்தாளா (நந்தி)

முனம்-வந்த அசுரர்களை வென்று கானில்
வள்ளியினிடஞ் சென்று முயன்று
மணந்தமுருக ஒன்று
வரமருள்நீ இன்று (வந்)

சிறு-மைந்தன் பாஸ்கரன்சொற் பாடி உன்றன்
மாமலரடி தேடி மலர்சூடி
மாதவருடன் கூடி
வணங்கினன்கொண் டாடி (மைந்)

37. ஆசிரியவிருத்தம்.

கடலாடை கொண்டிலகு படிமீது ஜீவரைக்
காத்திடக் கிருபை கொண்டு
கனமான செந்திலே ரகமயிலை மயுரகிரி
கைலைநிக ரருணை பழநி
இடமான சோலைமலை தோகைமலை விராலிமலை
எட்டிகுடி சிக்கல் வேளூர்
ஈழநாட் டுக்கதிரை போரூர் பரங்குன்றம்
இபலான குமர கோட்டம்
தடமேவு கொடுமளூர் சென்னிமலை மேருகிரி
தகையாந்தி ருத்த ணியொடு
தாணுவின் கைலைமலை மேலவயல் சோணு
சலங்குருக் குத்துறையு மேல்
மடைமேவு குற்றாலம் வாழ்கின்ற நாதனே
மதுரபாஸ் கரனே யாள்வாய்
மகனேயுமைக்கினிய குகனே தவத்தர்தொழும்
மயில்வாகனக் கடவுளே.

தேக்குங்கி மேரே என்றமெட்டில் மகுடம்,

38. இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுந்தரா கங்கைகுடிப் பொதுவினில் நடமிடு சோம (சுந்)

அநுபல்லவி.

சந்திர னுருவைச் சடையணிகுருவே
சந்ததமுனதிரு தாளிணைதனைச்
சாற்றிப் பெரியவ ரேற்றிப் புகழுமா (சுந்)

புளகிதகந்தம் இலகவனந்தம்
புறள்குழல்மடவர்தம் போகசம்பந்தம்
போதுமெனக்கினிப் போக்கிடு தொந்தம் (சுந்)

பொருள்கவராடு அரிவையருடு
பொய்யிலுழன்றேநீடு போற்றியேநின்றேன்
போதத் திருவரு ளோதத் தினமருள் (சுந்)

பாவலர்தாளைப் பணிந்திடுமேழை
பாஸ்கரசாமிசொல்லைப் பாடினேனெல்லைப்
பாண்டிப் பதியினை வேண்டிப்பிரியமாய்ச் (சுந்)

39-இராகம்-இங்கிலீஷ்நோட்-தாளம்-ஏகம்.

பல்லவி.

பாரும்பரங்குன்றோனே கண் பாரும் பரங்குன்றோனே
பக்தரெங்குந் தங்கவிங்கண் (பா)

அநுபல்லவி.

பரமனுக்கரும் பிரணவமதைத்
திறமுடன் புய மிருந்துரைத்திடும்
பால்வடி வேலா எனைக் காலனணு காதுகண்ணுற் (பா)

சரணங்கள்.

பாவிமருடசூராவியுண்ட தேவிதிருவுமையாள்பயின்ற
பச்சைமயில்வாகனனே யச்சமறத் தட்சணங்கண் (பா)

பங்கயனைச்சிறை யங்கெய்தவா
மங்கை தெய்வானை மகிழுந்தேவா (பா)

படமுடிகிலனெனதுடதுயரினியுனையொருகணமறகிலேன்
பற்றித்துய ரற்றிடவே முற்றுமருள் பெற்றிடக்கண் (பா)

பாவை வள்ளிமானை யாவலுடன்தேடிக் காவிலலைந்தவனே
பக்குவமாவைப்புசித்தேயக்கோவையிதழ்ப்பாவைக் கூடிக்கலந்

பங்கமில்லாதமுச் சங்கத்தமிழ்[தவனே
பொங்கும்பாஸ்கரன்சொல் தங்கும்புகழ்
பாடியுனைத் தேடிமனங்
கூடியேகொண் டாடினேன் கண் (பா)

மதனசரமழையதனில் என்ற வர்ணமெட்டு.

40- இராகம்-சங்கராபரணம்-தாளம் - திரிபுடை.

பல்லவி.

பதியிலழகியபரங் கிரிக்குமரா
பக்தன்பாஸ்கரன் பாடவரமருள் (பதி)

அநுபல்லவி.

மதியின்மேலொரு மாதைச் சுமந்திடும்
மாசிவனுக்குப தேசமொழிந்திடும் (பதி)

சரணங்கள்.

கதிரவனுடைய	ரதமதனிலுறும்
குதிரையுமதிகத்	துரிதமுடன்வரும்
எதிரி லுனதொரு	சிகரமயமதில்
உருகியிருவிழி	சொருகியழுமது
சதுர்மறையின்னெறி	யதுபெறுமகிபர்
சதமெனவுனது	பதமலர்புகுவர்
மதுரமொழிபுக	லருணகிரிநட
மாட அதிலவர்	பாடலெனுங்கொடி

(முடுகு)

மானிலமுழுதே	கிடுகிடுவென
மானிடர்பவம்போம்	படபடவென
ொனவர்புகுவர்	மடமடவென
வந்தநந்திவும்ப	ரிந்துமத்தளந்தொ
மிந்தியென்று	நின்றடிக்க (பதி)

புல்புலோங்கீஹஜார் என்ற வர்ணமெட்டு.

41-இராகம்-மால்கோஸ்-தாளம்-ஏகம்.

பல்லவி.

சாமி-மாமதுரைவளர் சோமதுரை (சா)

அநுபல்லவி.

தாமதமேனே பூமியிலுனதிரு தாளிணைப்பணிந்தேனே
தேன்மொழி மீனாள் காமுறநடமிடு தேவாயெங்கோனே

சரணங்கள்.

சேமமே தாராய் திருக்கடம்பூராய்
சிந்தைமிகுத்துனை எந்தநேரத்திலும் வந்துதுதித்தேனே (தா)
செறிமலருடனெதிர்படுமருகனுடல்பொரிபட எரித்தோனே
சிரித்துமுப்புரமெரித்தயன் சிரந்துணித்துவைத்தோனே
சித்தர்முத்தரொடு நத்துமுத்தமனே பக்திவைத்தேன்யானே
செஞ்சரணடிமலரைத் தஞ்சமெனவேபாஸ்கரன்
அஞ்சலிசெய்தேன் பெருமானே ()
(சாமி மாமதுரைவளர் சோமதுரை)

என்னகேள்விமுறை என்றமெட்டில் பின்மருடம்.

42-இராகம்-பிலஹரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னமுங் கோபமா எளியேனையா வேல்முருகையா (இ)

அநுபல்லவி.

உன்னை நம்பினேன் மண்ணையளந்த கண்ணன்மருகா (இ)

சரணங்கள்.

விண்ணோர்க்கதிபதியாக வுதித்தவா
வீரசூரனுரவார மறுத்தவா
வண்ணமயிலையடங்க மிதித்தவா
வள்ளியகம்வேடனுகக் கதித்தவா
வரிசையுடன் வார்த்தையிட
அரிவையவண் கூச்சலிடத்

திரமுடனெழுவரு மெதிர்படத்
தினையதில்வேங்கைமர மாய்நின் றிடத்
தேடி வேடர்க ளாடிநாடிடக் கூடுகுமரனே. (இன்)

கோமகனிந்திர குலசீலபாஸ்கர
சாமிதமிழ்க்கண்டு நீ மகிழ்வுகொண்டு
காமியர் மாயக் கருத்தெனு மிச்சையைப்
பூமியிலடியேன் போக்கிடவருள்செய்

புரதகனன் புத்திரனே
மரகதமயில் நர்த்தனனே
அரிசுதன்மதன் மைத்துனனே
அருணகிரியைக் காத்தவனே
அன்பாயமரும் தென்பரங்கிரி யெம்பெருமானே (இ)

ஜாவுரே சாவரியா என்ற வர்ணமெட்டு.

43 இராகம்-சிந்துபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

வடிவேலா விகசித மயில்மிசை யிதுததிவாராயா
வறுமையைத் தீராயா வரமிகத்தாராயா(வடி)

அநுபல்லவி.

காலனைவிழ வுதைத்தவ னருள் பாலா
கயமுக னிளையவனெனவரு சீலா

தாலமதனி லடியவர்க்கனு கூலா
தரணியிற் பிரணவ முரைகுரு மூலா (வாவடி)

வாலையினிருகர வரம்பெறுதீரா
வணங்கியமகபதி மருககுமாரா
ஓலமிடவசுரர் படையதுநீறு
பொருநொடிதனிலற வதைத்தசிங்காரா (வாவடி)

மான்மகளொடு மருவிடமிகவேதா
வனமிசைபொருவேட வுருவெடுபோதா
தேனருந்தினைதரப் புசித்திடுநீதா
திருமணம்புரிந்திடும் அறுமுகநாதா (வாவடி)

கோமகனருள்பெறு மதுரிதப்பூமி
குணவடிபார்களைத் துதித்திடத்தேமி
பாமகிழ்ந்துரைசெய்யும் பாஸ்கரசாமி
பணிந்திடமணங்கமழ் பரங்கிரிநேமி (வாவடி)

44-இராகம்-இந்துஸ்தாங்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தென்பரங்குன்றினில்வாழ் தேசிகனேசுகா
சித்தமகிழ்ந்தெனையாள்வாய் முருகாசண்முகா (தே)
அன்பரக மகிழும் ஆறுமுகாகுகா
அருட்டமிடுமயி லேறுவாகாமகா (தே)

நம்பி மகள் புனத்தை நாடியவா முன்னம்
நாரதர் கூறுமாது கூடியவாகனம் (தெ)

தும்பி முகர்க்கிளைய சுந்தரனே சொந்தா
தூயமலர்ப்பதத்தைத் தந்தருள்வாய்கந்தா (தெ)

இன்பமுடனே யுன்னை இரவும்பகலுந்தேமி
யேற்றினனேபாஸ்கர சாமிக்கருள்செய்நேமி (தெ)

45. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

ஓரடிச்சந்தம்.

பல்லவி,

பரமானந்த மெய்ப்பரங் குன்றேன்
பாஸ்கரன் போற்றும் (பர)

அநுபல்லவி.

பார்வதியருளிய வேல்கரங்கொண்டோன்
படையவுணர்களூர மறச்சிரம்வென்றோன்
பேர்பெறப்பழமுதிர் பழனியில்நின்றோன்
பிரணவமுறையதை யரனிடம்விண்டோன் (பா)

சரணங்கள்.

வனமீது வேடனுகைப் பண்டு நாரதர்சொன்ன
கனமான்குறவள்ளியைக்கண்டு காதல்பெருகி
மணமே சகியாமருள் கொண்டு மயிலே குயிலே
அனமேயெனவார்த்தைகள்விண்டு அவடனருக

டைந்து விரைந்தும றைந்துமி ருந்துமா னெங்கே?
என அம்மாது
வந்துசி னந்துப ரிந்துபு ருந்தமா னிங்கே?
தெனவினவ
பந்துபொ ருந்துகு விந்துசி றந்துள கொம்பே
யிரண்டுண்டென
நொந்துக சிந்துமொ ழிந்தது தந்துள் வம்பே
ஆகாதுனக்கும்
பாரின்மேலினை யாரும்மேயறிந் தாலும்மேவசை தூறுமே
யடி-பட்டுப்போகாதே கெட்டுச்
சேரும்மேவனந் தோறும்மேசின மீறும்மேயனை வோரும்மே
கணை-தொட்டு நீ திடுக்கிட்டுன்
வீரம்மேயறச் சாரும்மேசர மேறும்மேயுடல் வேறும்மே
யாம்-எட்டு வேண்டாம் பகட்டுச்
சோரம்மேஎன சாரம்மே? இது நேரம்மேபழி நேரும்மே
வழி தொட்டு எனை நீ விட்டு
சுத்தமுடனித்ததினி னைத்தனைநவி டுத்துநற்கு
ணத்தையு மடுத்தகல்பு னத்தையும டுத்து நீ வராதே
சொன்னேனெப்பிதே
எத்தனையு ரைக்கினு மனத்தையும றுத்துநின்க னத்தநற்க
ருத்தினில்ம ணத்திடக்கு றித்துமேபே சாதே
தோழரிப்போதே

ஓடியேவருகுவர் வாடிய சருகுபோல்
நீடிபவஞ்சக மாடியமின்சிர
மற்று-வீழுமே யிற்று

சேடிய ரும்பலர் கூடியே நின்கதை
கோடிய கேலிகொண் டாடியே பேசுவர்
சற்று யோசிநீயுற்று

உரத்தில் மிகுத்தவரத்தி லுதித்த
உத்தமனேயெனை நத்துகிறுயென
வோதும்-போதது கேட்டுச்

சிரத்தைய சைத்துநற் பொருத்துமி குத்துள
சித்திரமான்மக ளுத்தமியாளுக்கு
கந்து-சேவைநீ தந்து

செந்தியில்மி குந்தமரார் வந்துமேந லுங்கிடவும்
தொந்துமிதொ மிந்தியெனத் துந்துமிமு ழங்கிடவும்
சிந்தனைப் ...ரிந்தவர்கள் பந்தமேய கன்றிடவும்
சீர்பெறுமணப் ...முடித்துச் சிகிமீத மர்ந்தகுரு

(பரமானந்த மெய்ப்பராங் குன்றேன்.)

———

என்னவேணுஞ் சோல்லடி என்ற வர்ணமெட்டு.

46. இராகம்-காம்போதி-அடதாளம்-சாப்பு.

கண்ணிகள்.

வண்ணமயில் வாகனா வாகுற வள்ளிமோகனா
அண்ணலேநானுன்னையன்றி எண்ணவேறு தெய்வமுண்டோ

வானவருந் தானவருங் காணவரும் ஞானகுரு
வானவனே வீணுடலைத் தானினைந்து நானலைந்தேன் (வ)

தேனுடன் தினையருந்திக் கானிடஞ் சுனையருந்தி
யானைமுக மானவனைத் தானழைத்தகோனேசித்ர (வ)

சேனைகள் நெருங்கிப்பல ஆணையிட்டிறங்கிமலை [ன்
சேர்ந்திடப்பின்தேர்ந்திடக்கண்கூர்ந்திடவன்பார்ந்திடும்பொ

ஆனையை யுரித்தணிந்த வேணியர்புயத்திருந்து
அஞ்சிடாமல்விஞ்சைபுகழ் கொஞ்சுமொழிரஞ்சிதமா (வ)

பூனையினுருவடைந்து போனவன்பெண்ணையடைந்த
புண்ணியனே உன்னைத்துதி பண்ணும்பாஸ்கரன்பணிந்தேன்

சாவரியா னமாரிரே என்ற வர்ணமெட்டு.

47. இராகம்-சிந்துபைரவி-தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

புள்ளிமா மயிலேறிவா வனக்குற வள்ளிமோகனே (மா)
வாமிசுதாதினே வானவர்துதி யோகனே-என்னை
வந்தாள் கடம்பாருந் தேகனே-குற
வள்ளிமோகனே (மா)

நான்முகனைச்சிறை நவின்றுசெய் கோவனே உனை
நம்புமென்பா லன்பாவோனே குற
வள்ளிமோகனே (மா)

காமனைத்தீய்த்திடு கடவுளர்க் கோதிடு-ஞானக்
கந்தாவரந்தந்திடு-குற
வள்ளிமோகனே (மா)

தேன் மதுரபாஸ்கர சாமிக்கேவாக்கருள்-தெரி
சித்தேனெதிர்வரவேணுமே குற
வள்ளிமோகனே (மா)

ஜசாகாலே காலே என்ற வர்ணமெட்டு-பின்முடுகு.

48. இராகம்-தேசிகம்-பின்முடுகு-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவன்பாலா வேலா தேவராதியர் தினந்துதி புரிகுரு
தேசிகாசீலா குறமகள் மாசுகா லோலா (சிவ)

அநுபல்லவி.

ஆலமுண்ட நீலகண்டன் பாலாதண்ட பாணியே
அருள் தாதா குருநாதா மறைப்பாதா பேணியே
அத்தனே சித்தனே கர்த்தனே சுத்தனே
மெத்தவும் நத்தினேன் பத்தனையாள் (சிவ)
நீர் துயின்ற மால்பயின்ற நான்முகன்றன்னை முனே
சிறையிட்டு மறைகேட்டு சிறையோட்டு மெய்யனே (சிவ)

புதிய பெரிய பக்திரஸ கீர்த்தனங்கள்.

நிறுத்தியசூரர் திறத்தையறவே
துறத்திமயிலி னுறத்தில்வாழ் (சிவ)

தேன்மதுர மேமிகுந்த பூமலரைத்தேடியே
தெய்வகுஞ்சரி மணாள சீர்பதத்திற்சூடியே
சிந்தையிற் பாஸ்கரன் செந்தமிழ்ப்பாடியே
சிந்தித்தேன் வந்தருள் செந்தியில்வாழ் (சிவ)

ஈனே அச்சமெத்து வாலிஜான் என்ற வர்ணமெட்டு.

49. இராகம்-சிந்துபைரவி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மாறியாடும் மதுரசனே மான்மதிமழுவேந்துமீசனே
மாரனுசா மேருவாசா-திரு
மாதுமையாள் பரகநேசனே (மாறி)

நாராயணன் தேடுமீசா தேகாபரணப்பிரகாசா
நடராஜா நடராஜா
நாதவேத போதகீத பாதமோதநீதமேசெய் (மாறி)

மனமதி லனுதினம் உனதிருகனமிகுமலரடி
பணிந்திடும்மைந்தனும் பாஸ்கரசாமி
செப்புஞ் செந்தமிழ்க்கே அருள்நேமி
மனம்பூமி றனிற்றேமி
மறவே னருளைத் தரவே எதிரில் வரவே
கருணைபெற அருள்புரி (மாறி)

60. ஆசிரியவிருத்தம்.

எந்நாளு முமது பாதகம லத்தையே
இருதயத்திற் பதித்து
இருவாக்ஷி செண்பகம் மருவுமல் லிகையுடன்
இனியரோ ஜாக தம்பம்
செந்தா மரைப்பிச்சி முல்லையொடு கஸ்தூரி
செவந்திமா கொன்றை வில்வம்
சிறுதும்பை மலராத்தி மலர்கொண்டு பூசித்துத்
தினந்துதித் திடு மன்பனைக்
கந்தசாமீ யின்னும் வந்தாள மனமது
கசிந்திடா வகையி தென்ன
கார்த்திகே யாமிக்க நேர்த்தியிது வெளியிடில்
கண்டவர்சி ரித்தி டாரோ
சந்ததமு முனதடியார் கூட்டுறவு தன்னிலே
தமியன்பாஸ் கரனை யாளச்
சரவணையி லேபிறந் தருவுருவ மாய்வரந்
தருபரங் கிரிக் கந்தனே.

காலக்னபியாபஞ்யிணஹ என்ற வர்ணமெட்டு.

51. இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மகா தெய்வகுஞ்சரி மகிழ்சேவற் கொடியோனே-நா
னைம்பொறிவழி நினைத்தே னனுதினந்தானே

ரனின்மாமகளைத்தேடி கலந்தணைந்தோனே
வீணிலிந்த மானிலத்தில் வெம்பித்தவித்தோனே (மகா)
யாருந் துணையில்லையெனக் காறுமாமுகா-யான்
கோரும் வரமேதாராய் குன்றினில்வாழ்குகா (மகா)
காளிசூலி நீலியாம் கபாலி பாலனே-எந்த
நாளிலும் நின் தாளினைந மஸ்காரஞ்செய்தனே (மகா)
பூமி எங்கினும் புகழ் புள்ளிமயிலோனே-நித்யம்
போற்றிடும் பாஸ்கரன்துதி வள்ளிமகிழ்வோனே (மகா)

சந்திரா சரச்மதலோசலர என்ற மெட்டில் ஈரடிச்சந்தம்.

52. இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சுந்தரம்நிறைந்ததிருச் செந்தியிலமர்ந்தகுருநாதா-என்
பந்தவினை தொந்தமறத் துன்றனருள் தாதா
முந்தரன் குழந்தை யெனும் போதா
கந்தனே பொற் பாதா (சந்)

இந்திரனைத்தொந்தரைசெய் துந்தவுணருந்திரளாய்விழத்-தம்
மந்திரமெனுந் திறமறுந்தவரு மாள
வந்தனை மிகுந்த மரர் வாழ
மைந்தனை நீ யாள (சந்)
பூமகளைத் தாமணையும் நான்முகனைத் தேமச்சிறைமீதே-வைத்
தேமகிழ்வு சோமனறிந் தேயுற முப்போதே

மாமறைசொற் றுய்முறை தப்பாதே
தாமதம் செய் யாதே (சங்)
தேன்மதுசூழ்மாமதுரைக்கோமகனின்மாகுலவன் தேமி-நின்
நாமமதையேதொழுதேன் ஆமதிற்புகழு மிந்தப் பூமி
பாமாலைசெய்தேன் பாஸ்காசாமி
சேமவழிநேமி (சங்)

மனத்தினிற்றுளைக்குமாரன் என்றமெட்டு.

52. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பனைக்கரச் சினத்திபத்தன் பயிலுமங்கைபாகனே
எனக்கரைச் சணத்தில்வந் தருள்வரந்தியாகனே
ஏற்றினேன் துயர் மாற்றுவாய்
போற்றினேன்கலிதூற்றுவாய்
ஏதுசாமியென்மீது நெஞ்சிரங்காதுநீ செய்யுஞ்
சூது அதனைத்தெரியேனே (பனை)

மனக்குறைதவிர்க்கஇன்ப மாகவேஉதித்தவா
வனத்தினிற் கதித்தவேட னைமோனதத்துவா
வாரியில் மறைசூரனைக் கூறுசெய்த ஒப்பாரனே
வால்மீகிழும் பாலா உனதுதாளிணை நானே
யேழை மறவேன்லடிவேலா (பனை)

தினைப்புனக் குறத்தி யின்ப தேவனே யுன் சேவைதா
தினந்தினங் கனத்தசித்தர் சேர்ந்தமா சிவன் சுதா

தேடியுன் புகழ் பாடியே
யீடில்லாது கொண்டாடியே
சேய்துதித்தனன் வீரநர்த்தன
நாரணார்க்கரு மருகனே (பனே)

தொனித்த நற்பரங்கிரிக் கினித்தசெங்கை வேலனே
தனித்துனைக்கரங்குவித்தழைத்தேன் கங்கைபாலனே
தோகையின்சிகிநிர்த்தனு மோகனப்புயன் மைத்துனு
சோமபாஸ்கர சாமிசெந்தமிழ்
நாமவின்புகழ் பூமியிற்சொலசுகந்தாராய் (பனே)

சுரே ஷாதுமான் ஜாவுரே என்ற வர்ணமெட்டு.

54. இராகம்-சிந்துபைரவி-தாளம்-ஏகம்.

பல்லவி.

எனே-ஆண்டவா ஆடுந்தில்லைத் தாண்டவா
ஆதாரமேதுமிலாது நானேதினேன்
ஆடுந்தில்லைத் தாண்டவா

பூண் டர வம்புலி மதி மழு துலங்கப்
புனேந்தே புனேந்தே புனேந்தே புனேந்தே
புரத்தைச் சிரித்து எரித்தார்ப்பரித்துக்
கரித்தோலுரித்து விரித்துத்தரித்த (ஆ)
பாண்டவர் தூதனேடிப் பாடித் தேடிக்காணுப்
பதமே பதமே பதமே பதமே

பத்திமனத்தொடு மெத்தவும் நத்தினேன்
சித்தமிகுத்தரு ளுத்தமா நித்தமும் (ஆ)

காண்டீபனுக்கந் நாளினிற் கனிந் தருளுங்
கர்த்தனே கர்த்தனே கர்த்தனே கர்த்தனே
கருணை புரியத் தருணமிதுவே
சரண மறவாச் சிறுவனெனையே (ஆ)

பாண் டிமுத் தமிழ் வித்வ பாஸ்கரசாமியும்
பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன் பணிந்தேன்
பரமனே யுன் றிருமலரடி
சிரமணிந்திட வரமெனக்கருள் (ஆ)

மகிபனே போலனேலாவமா என்ற வர்ணமெட்டு.

55. இராகம்-இந்துஸ்தான்-பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

மகபதி மகள்புகழ் யோகனே குகா
விகசித மிகுமயில் வாகனே சுகா (மக)

அநுபல்லவி.

அ ர மகிழ்ந்தெனக்குன தருள்புரிதுய்யா
அரியபரங்கிரியில் வளர்முருகையா
பகவனுக்கருமறை யுரைத்திடுமெய்யா
பார்வதிவேல்தரப் பிடித்திடுகையா (மக)

அசுரர்குலமதனை யறுத்தகெம்பீரா
அமரர்கள் பயமற வுதித்த சிங்காரா
திசைமுகனைச்சிறை செய்தவீரா
தேடியுனைப்பணிந்தேன் வரமினித்தாராய் (மக)

பதிபுகழ்பாஸ்கரன் தமிழினைப்பாடிப்
பக்தர்கள் பதமதைச் சிரமிசைச்சூடி
அதிவிரைவுடனுன தாலயந்தேடி
அன்புடன் புரிந்தேன் தோத்திரங்கோடி (மக)

ஆசா ஏகியாஹூ மெலா என்ற வர்ணமெட்டு.

56. இராகம்-மால்கோஷ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வேலா கோலா கலா
வெற்றிமயி லுற்ற கமலா சேவலா
வாலா பாலா நீலா
வெற்றிமயி லுற்ற கமலா சேவலா
காலசூலன் பாலா மறைமூலா வனு கூலா சீலா
கானக் குறவள்ளி தெய்வயானை மணவாளா லோலா
கந்தா கமுகா சலா
வந்தா தரிமா சிலா
எந்தாய்வழிநீ சொலாய்
மலருளவனுக்குபர் மந்திர முரைத்தபெரு
மானேயுனைத் தானேநம்பி னேனேமுரு கோனேதிரு

மாதுமையாள் சேயனே
சாதுக்கள் சகாயனே
ஓதுகார்த்தி கேயனே (வே)

ஞாலமிசை மாதர்வலையாலே மயங்காதுநிலை
நாடிப்பதி கூடித்துதி பாடித்தி நீடித்தலை
நான் அடையவே செய்யா
தேன்கடம்பணி துய்யா
வான்தொழும் பன்னிரு கையா (வேலா)

ஜாலமேசெய் யாதே நெடுகாளா யுன் னுலயந்தேமித்
தங்குமதுர முத்தமிழ்ச் சங்கம்வாழ் பாஸ்கரசாமி
சந்தத முனைத்தேடிச்
செந்தமிழ்த் துதிபாடி
வந்தனன் வந்தாள்வடி (வேலா)

பியோ பியோஜி ராஜா ரங்கேனரம் என்றமெட்டு.

57. இராகம்-இந்துஸ்தான்-கவாய்-தாளம்-ஆதி.

பல்லவி.

திருச் செந்தூரில்வாழுந் தேவா காவா (திருச்)

அநுபல்லவி.

தேவா காவா வரந்தாவா சிவா (திருச்)

சரணங்கள்.

சந்திரனொடு கங்கை சார்ந்து சிரந்துலங்குஞ்
சுந்தர னுதல்வரும் சுந்தரகடம்பாதிருச் (செ)

மைந்தன் பிழைபொறுத்து மகிழும்மனங்குறித்துச்
சொந்தமயில்மிசையு கந்தேவரந்தாதிருச் (செ)

தந்தைகுருவும் நீயே சந்ததமுன்றுணையே
பந்தபாசங்களறப் பார்த்தெனக்கருள்வாய் திருச் (செ)

இந்திரன் குலநேமி யுந்துபாஸ் கரசாமி
செந்தமிழ்க்கேபாதார விந்தமளிக்குந்திருச் (செ)

---

58. ஆசிரியவிருத்தம்.

பண்டுநாள் உள்ளவரை பக்தகோ டிகள்தன்னைப்
பாதுகா வாதி ருந்தால்
பாரேது விண்ணேது பாதாள மேதுமுன்
பஞ்சபூ தங்க ளேது
விண்டுநான் முகனேது சொர்க்கமொடு நரகேது
விண்ணேது மேக மேது
விதியேது மதியேது வேதமறை புராணமும்
விலங்குசாத் திரமு மேது
தொண்டுசெயும் அடியார்கள் உய்யும்பொ ருட்டிலே
தோற்றமொ டொடுக்க மான

சுத்தசை தன்பமே சித்தாந்த மென்கின்ற
சுருதிக்கு மாதாரமே
சண்டனுடை நாட்களைக் கோலைபது வருமுனக்
தமியன் பாஸ் கரனை யாளாய்
சரவணையி லேபிறந் தருவுருவ மாய்வரந்
திருபரங் கிரிக் கந்தனே.

வாராயெனையனைய என்ற வர்ணமெட்டு.

59. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேலா விமலனருள் பாலா வேதமறை
மூலா வேண்டுமனு கூலா
விரிமலர்செறி பரங்கிரி வளர் குருவடி (வே)

அநுபல்லவி.

கோலாகலனேசீலா குறத்திதெய்வானை லோலா
கூறவுணப்படையின் காலா-நற்
குளிர்நதிமதிசடை யொளிர்நுதல் வரும்வடி (வே)

சரணங்கள்.

தீராவினையகற்றுந் தீரா தேவர்க்குப
காரா சேவற் சிங்காரா
திடமொடு நடமிடு தடமயி லுடனடு (தீரா)
பாராமுகமென்கூராய் பாவல னெனைச்சேராய்ப்
பாதுகாத்துன்றனருள் தாராய் நான்
படமுடியிலை யெனைபடுத்துயர் கெடவாராய்(வேலா

64. பஹாரியாலா ஆயி தேக்கோ என்றவர்ணமெட்டு.

பல்லவி.

மகாவசூரபத்ம மயூரவாவேவா (மகா)

அநுபல்லவி.

சுகாசிர்வாதமாதுமை சுகிர்தகுணபாலா
சூராமாவீரவாகுதுதிசூலா சோமசுந்தரசீலா
துடிக்கஅவுணர் நொடிக்குளேவுயிர்
விடுக்க அடித்து நடிக்குஞ்சிகி (மகா)

திரிபுர சவாரி நாரதாதி கூறுமாணைத்
தினைதனிலினிதுடனேதெரிந்தவனே மணம்புரிந்தவனே
திரளூறமொடு வருகுறவர்கள்
பெறுதிரிசன அறுமுகனே (மகா)

அந்தரத் தேவர் மூவரோ டமரரைப்பாராட்டித்
தொந்தரைபேகவேகமாகத்துயரோட்டிவித்தசுடரேகேட்டி
இந்திரன் குலத்தில் வந்திடும் பாஸ்கரன்
செந்தமிழோதினேன் முந்தன்புகாட்டி (மகா)

எலமிலஜான் என்ற மெட்டில் பின்மருடம்.

65. இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

முரஹரிமால் மருகா முருகையா
வரமருள்வாய் பரங்கிரி வாழ்மெய்யா (முர)

அநுபல்லவி

கரமதில் வேல்பிடித்த மலர்க்கையா
பிறையணிகர்த்தனுக் குரைத்தமுருகையா (முரா)

சரணங்கள்.

நினைத்தபொழுதெனக்குன் பதத்தைக்கொடுத்திடுவாய்
நிகழும்பெண்ணாசை நீங்கத்தடுத்திடுவாய்
மனத்தைப்பிடித்துன்னடிக் கூடக்கப்படுத்திடுவாய்

மத்தகனுக்கிளைய நீதா
நித்தியசுத்தமலர்ப் பாதா
முத்திநெறிக்கருணைத் । தாதா

முற்றுமுன்னுற்றுசீர்பெற்றடிபற்றினேன்
சற்றெனைக் காப்பாற்று முருகையா (முரா)

வனத்தி லுதித்த தினைக் குறத்தி யிடத்திலொரு
மரத்தை நிகர்த்தவளின் குணத்தைத் திருத்தியேமுன்
கனத்த தனத்தாலுன்றன் மனத்தைக் கவர்ந்திடவே
புனத்திற் பசிக்குதெனத் தினைத்தேன்புசித்திடவே

தந்திமுகத்தணன் வந்திடவே
சிந்தைமிகுத்தவள் நொந்திடவே
காந்தர்வம் புரியுங் குருவே

சந்ததம் பாஸ்கரன் செந்தமிழ்க்கிசைந்து
வந்தருள் சொந்தமயில் மீதையா (முரா)

சித்தம்சேபாஸ்ஆஸாலீம் என்ற வர்ணமெட்டு.

66. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செந்தியில் வாழும் வேலனே-தீவினை
தீர்ப்பாய் சீலனே
தந்தியின் சோதர குகா-தாளிணைத்
தாவா ஷண்முகா (தந்தி)

தமியன் தனுகரண புவன போகம்
சனன மெடுத்திறந்த விதமனேகம்
தயாளம் நீங்கிடாதெனக் கிப்போதே
தா ஞான யோகம் (செந்)

அந்தியுஞ் சந்தியுந்தானே
அடிமையாக தொழுதேனே
இந்தமா நில மதில்பானே
ஏழையெப்படி யுய்வேனே (செந்)

வண்ணமா மயில் வாகனா
வள்ளிமான்மகிழ் மோகனா
பண்ணவர் தேடியுங் காணா
பரமன் பயின்றமா குனா (செந்)

கண்ணுயிரத்தோன் மருகா
கழுக்குன்றத்தூர் முருகா
சொன்னதெல்லாமே அறிவாய்
துரியத்துளென்னை யாள்வாய் (சொ)

விண்ணுலகோர்க்கு வேந்தனே
வீரரை வேலால் வென்றோனே
புண்ணியாயெந்நாளுந் தானே
போற்றினேன் பாஸ்கரன் டானே (சொ)

---

67 ஆசிரியவிருத்தம்.

பாண்டவர்ச காயனுக் கன்பான மருகனே
பன்னிருகை வேல்முருகனே
பஞ்சகர மேகொண்ட அத்திமுக னுக்கிளைய
பாலசுப் பிரமணி யனே
வேண்டினோர்க் காயுளும் யோகபல சித்தியும்
விரும்புவார் மோக்ஷ மீயும்
வீரசிங் காரனே சூரசங் காரனே
விண்ணவர்க் குபகா ரனே
தீண்டவே யெமதூதர் ஓடிவரு முன்னமே
சிறியேனை யடிமை கொள்ளச்

சித்தமு மிரங்கிவர நித்தமும் பாமாலை
தேவனின் மேற்பா டினேன்
தாண்டவன் சேயனே திருமலிந் தருள்பெருகத்
தமியன்பாஸ் கரனை யாளாய்
சரவணையி லேபிறந் தருவுருவ மாய்வரந்
தருபரங் கிரிக் கந்தனே.

குயிலேயென்றன்மீதிலுனக்கேன்ன என்றவர்ணமெட்டு.

68. இராகம்-மால்கோஷ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

மயிலே வடிவேல ஞேடெதிர் வா வா
கயல்விழிவள்ளி கணவனேறப்புள்ளிக்
கலாபம்விரித்தே துள்ளி நடம்புரி
(மயிலே)

குயில்மொழிதேவ குஞ்சரிசேவற்
கொடியனைக்கொண்டாடும் நான்வரமேவ
(மயிலே)

தயவின்றிவேதன் தனைக்குட்டும் பாதன்
தந்தையின் செவியோது மந்திரபோதன்
(மயிலே)

உயர்வானவாமி ஜெயமீயுஞ்சேமி
உன்னையேநம்பினேனே பாஸ்கரசாமி
(மயிலே)

அவதாரபுருஷன் என்ற மெட்டில் பின்மருடம்.

69. இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி,

திருமால்மருகன் தேசிகனும் அறுமுகனும்
தேவர்கள் தொழும் குகனும் (திரு)

திங்க ளெங்கி னுந்தி மிர்ந்த
தென் பரங் குன்றிலமர்ந்த (திரு)

அநுபல்லவி.

பரமனுக்கருமறைப் பிரணவமுரைப்புய பாகன்
பரிமள மயில் வாகன் (திரு)

சரணங்கள்.

தென்னிலங்கைமன்னவன்றன் சென்னியறமுன்னிழைத்த ()
சித்தம்வைத்து நத்தியொரு மித்துதித்தெதிர்த்த புத்தசூரர்
ஒத்தக ளத்தினிடைச் செத்திடத் துரைத்தனஞ்செய் (திரு)

க்ஷேத்திரத்தணுகி முன்னர் தோத்திரநா ரதர்சொன்ன
பாத்திரத் தருகிலுண்ண ஆத்திரந்தனைப்பருகுந்(திரு)

தேடியேமாகிண ஞேடியேசோதரன்
னாடியவரறதி நீடுறவாடிய
திறமையிலதிகுண குறமகளிருதய
சுகமுறத்திருமண மதுபுரிந்தருளிய (திரு)

தித்தித்திடுமதுரச் சொற்றமிழதி
பத்தித்திருவுள மெத்தச்சுகமருள்
ஜெகம்புகழ்மகபதி குலம்வருபாஸ்கரன்
அகமகிழ்ந்திடுதெரிசனந் தருசாஸ்பதன் (திரு)

தில்குசத்தா நீயேசமன் என்ற வர்ணமெட்டு.

70. இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம் - ஏகம்.

பல்லவி.

செஞ்சேவற்கொடியோனே ஞானதேசிக வேலா (செஞ்)

அநுபல்லவி.

தேசிகவேலா எனக் கேசுகமூலா (செஞ்)

சரணங்கள்.

முத்தேவர்க்குபகாரம் மிசச்செய்ய னுகூலா
செய்ய னுகூலா அருள் வையுமைபாலா (செஞ்)

தீங்காவிற் றினைமேவு குறக்கன்னியின்லோலா
கன்னியின் லோலாசடைச் சென்னியன்சீலா (செஞ்)

அம்மூவர்க்குயர்வான குருமூர்த்தியேகோலா
மூர்த்தியேகோலாகலக் கார்த்திகைமேலா (செஞ்)

இப்பூவில் சர்வஜீவ துயர்போக்கிய நீலா
போக்கிய நீலாதமிழ்ப் பாஸ்கரநூலா (செஞ்)

அ. கணபதி பிள்ளை ராஸ் ஆகும்
அ. காளமுத்துப்பிள்ளை அவர்கள் நுால் தந்த

ஜோர்தூர என்ற மெட்டில் பின்மருடம்.

71. இராகம்-சிந்துபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி,

பார் பார்வதியருளும்பாலனேயெனைக்கடைக்கண்ணால்நீ (பா)

அநுபல்லவி. [ன்

யாருதவிவேறெனக்கிங்கையனேஉன்பாதம்மெய்யாகநம்பினே

சரணங்கள்

மாரன் மைத்துன கொடிய தீரவீரனும் நெடிய
சூரனுடல்நூறுகூறு செய்துமிந்தப் பார்முழுதும்
வலம்வர்கொடியில்வந்துஞ்
சுந்தரனிடம் முந்தவோர்கனி
தந்திடுவெனும் மந்திரனேகண் (பார்)

மாயவலைதன்னில் நித்யம் மயங்கித்தவித்தேன்நித்யம்
ஆயர்குலக்கண்ணனருமைமருகா சேயன்பாஸ்கரனின்
சிந்தைகொள் முருகா
தென்பரங்கிரி யின்பமாயம
ருங்குமர பரம் பொருளேகண் (பார்)

---

72. இராகம்-சுருட்டி-தாளம் - ஆதி.

பல்லவி.

தேனருவிகமழுந் திருபரங்கிரிவேலா
தேவர்கள் தினந்தினந் தொழும் (தே)

அநுபல்லவி

மானருளுங்குறமக ளுடன்நடமிடும்
மயிலுடனெனதிடம் வரவெனதடைபடும் (தே)

சரணங்கள்.

ஞானமறை யவரொடு முனிவர்கள் துதி
நதிமதியணி சிவனிரு செவியதிற்பதி
மோனகுருவுறு முகவனேவிது ததி
முறைதவறுமெனது குறைதவிர்ப்பதுன்கதி (தே)

நானுனது திருவடி யவர்களிலொரு
நாயேனெனவறிந்தும் நீமவுனம்புரிந்தால்
நீணிலந்தனிலிதை யெவருமறிந்தால்
நிந்திப்பாரனுதினமுஞ் சிந்திப்பாருள்ளமகிழ் (தே)

வானவர்களிருபுற மிருந்தகமகிழ்
மகபதிகுலம்வரச் சுகமதுரிதம்புகழ்
கானமழை பொழிந்தது நிறைஜெகந்திகழ்
கர்த்தனேபாஸ்கரன்பணிசுத்தனேபக்தனையாளும் (தே)

73. இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

போதா திருக் கூடற்பூமி நாதா -முன்
போற்றினேன் பாஸ்கரசாமி சதா - என்
மாதா பிதா குரு தெய்வம் நீதா -னின்
மாதொண்டரில் நானொருவன் தாதா (போ)

சூதாயிருக்கத் தகாது மெய்யா-நற்
சுகந்த மீனுளைத்தழுவும் கையா-இங்
காதாரமான கருணை செய்யாய்-மெய்
யறுபத்து மூவர்க்கருளுந் துய்யா(போ)

வேதா மறையோது வித்த எந்தாய் - மா
வேழமுகன் கைக்கனியுந் தந்தாய்-அப்
பேதா வழக்கை யுரைக்க வந்தாய்-நற்
பேரின்பக் கூத்தாடி யிங்கமர்ந்தாய்(போ)

மூதாக்கள் தேடிவைத்த தங்கமே-தேன்
முத்தமிழ் வித்வஜன சங்கமே-பார்
நீதானுய் வந்த சொக்கலிங்கமே-நிறை
நித்தியமேஅன்பிலுறும் பொங்கமே(போ)

---

74. இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

ஓரடி

பல்லவி.

நித்தியகல்யாணிபாலனே நல்ல
நீலமயிலேறிவரும் கோலாகல சீலவேலனே (நித்)

அநுபல்லவி.

சத்தியலோக வேதனைச் சாட்டியே சிறையிலிட்டுச்
சற்குருவெனச் சங்கரனுக்குப் பிரணவ மூலனே(நித்)

சரணங்கள்.

பக்தியாயுன்னைத்தேடிப் பணியுந்தேவருக்கோடிச்
சித்திரவேல் சூடித் தீர சூரன் முன்னோடிச்
சென்றமரார்குமரா செருக்களம்
நின்றயராச்சமரா நெருக்கிய
தேரொடுசேனைகளேறிட யானைகள்வீறிடவே முன்னம்
போரிடவே பரி நீட்டிச் சூர கிரி வாட்டி
வேரொடு தானவரே கெட வேலனி சார்புறு மாமுகத்
தாருகனுர் படையோட்டி சத்திவேல் காட்டித்
தென்பாய் ஜெயமடைந்து
முன்பாய்த் தேவருக்கர
சன்பாய்த் தருங்கருணை
யின்பா தென்பரங்குன்றில்
சித்தர்கூடிட முத்தராடிடப்
பத்தர்பாடிட ஒத்துநீடிடச்
செஞ்சரணத் தஞ்சமென அஞ்சலிசெய் குஞ்சரியை
மிஞ்சுமனோ ரஞ்சிதமாய்க் கொஞ்சிமணக் குஞ்சுகிர்த
தேவா சேயனை வந்து
காவா திருக்கார்த்திகை
மூவா ஜெகமகானு
பாவா சிந்தையிற்றினம்

தேன்மதுரமேபொழியச் சோமனருள் பூமி
நேமமுடனேந்தருவால் சேமமுறும் நேமி
வான்மகிழுங் கோமகனன் பாய்ப்புகழுங்கனலோல
பாமாலை செய்துன்னைப் பணி பாஸ்கரனுக் கனுகூலனே
(நித்தியகல்யாணி)

தேங்கிநின்றிடுஞ் சேந்திருசூழ்சுந்தரி... என்றமெட்டு

75. இராகம்-ஆரபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பூங்கமழ்மணம்பொங்கு திருக்கங்கைகுடி
தாங்குதிங்களுஞ் செங்கதிருந்தங்குமுடி
யோங்கிடவளர்ந் துற்றசிவாசங்கர
உருவானவ திருமாலயன்
அருவானவ வருவாய்நருவாய்
(பூங்கமழ்)

தீங்கிடவருமத்தக மோடப்பசுவை
தாங்கிடவிரதத்திடம் நீடச்சிசுவை
ஏங்கிடாமலக்காலன் விழச்சூலமெய்
இறைவாசதுர் மறைவானவ
விரைவாயருள் புரிவாய் பரிவாய்ப் (பூங்)

நீங்கிடாப்பந்த பாசமிடுவேசையரை
ஏங்கிடாதுன்றன் நேசரடிபேசவருள்
தேங்கிடாக்கருணாகர சம்போதர

சிவமேயெனக் சிவனார் துணை
பவமேயறத் தவமேதாரிணே

(பூங்கமழ்)

பாங்குபர் கூடற் பாஸ்கரனையாண்டவனே
தேங்கசிதிருத் தில்லைநடம் பூண்டவனே
மாங்கல்யமதுராபுரி மீனும்பிகை
பதியேகுண நிதியேயதி
பதியேயித் தகியே கதியே

(பூங்கமழ்)

சஞ்சலமாய் நெஞ்சமிக வுழன்றேனே என்ற வர்ணமெட்டு.

76. இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாஸ்கரன் பணிய நன்மைதருவாரே திருப்
பாண்டியிற்றினம் பவனி வருவாரே
பாசமுடன் மீனாட்சிசொக்
கேசனின் குருவாய்ச்செசம்
பேசப்புகழ் தங்கு மேற்கு
வாசற் றேடியே (பாஸ்)

தீர்க்கமுள்ள மந்திரமுந் திருநீறே-வந்து
தேவர்களும் மூவர்களும் பெருசீரே

சித்திக்கத் தவமியற்றும்
பத்திக்கு நயம்புகட்டும்
சித்திக்குச் செயமேகிட்டும்
முத்திக்கு வித்தாய்ப் (பாஸ்)

அப்பர் சுந்தரர் மாணிக்கரருள் கீதம் - பாடி
அந்தரத் துந்துமி முழங்கிடு நாதம்
ஆட்சியுடனெக் காலமும்
மாட்சிபாய் நடத்தும்பூஜைக்
காட்சியின் தெரிசனத்தால்
மோட்ச லாபமே (பாஸ்)

கற்பகத் தருவுமெதிர் கணபதியும் -ஞானக்
கந்தன்புள்ளிமயிலமர் குணநிதியும்
கங்கைமதி தங்கும் வேணிச்
சங்கரன் நித்ய கல்யாணி
தங்குந்தென்கூடல் வசிப்போர்க்
கெங்குஞ் சுகமே (பாஸ்)

77. ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள்பேரில்.

விருத்தம்.

திருநடன மாடியசி தம்பரச் சேத்திரந்
திருவொற்றி காசிநகரந்
திவ்யதிரு வாதவூர் அருணாச லத்திநெடு
திருமதுரை கைலாசமாந்

கருவிலணு காவரம் அருள்கின்ற பூவனங்
காசியிலு யர்ந்த கதியாங்
கன்மவினை யாகிய பாபமே நாசமாங்
கருதரிய குற்றாலமாங்
குருவடிவ மாய்நின்ற சதுரகிரி மேருவொடு
குணவடிவ கோகர்ணமாங்
கோயிலார் குடிகொண்ட சிவமேயுன் மகிமையைக்
கோழையான் சொல்ல வெளிதோ
சுகதுரிய வடிவமே அடியேனை யாளுவாய்
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
சோமசுந் தரக் கடவுளே.

---

78. சோமசுந்தரக்கடவுள் திருவிளையாடல்செய்த

ஆசிரியவிருத்தம்.

விந்தையா யெழுகட லழைத்துமே காஞ்சனையின்
வினைதீர்த்து ஆளவிலையோ
வித்வானைச் சபைதனிற் பத்திரன் பேருக்கு
வெற்றியை யுரைக்க விலையோ
எந்தையே சேகரப் பாண்டியனுக் காகவே
ஏகியச் சோழன் மீதில்

எண்டிசைக ளும்அதிர சுந்தரப் பேரம்பை
எய்துடன் ஜெயிக்க விலையோ
தந்தைதாய் உனையன்றி வேறில்லை யெனவந்த
தருமியைக் காக்க விலையோ
சமரினிற் றகையுற்ற பாண்டியன் சேனைக்குத்
தண்ணீ ரளிக்க விலையோ
சொந்தமா யெனையாள மனமிரங் காததேன்
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
சோமசுந் தரக் கடவுளே.

---

79. ஆலத்தை யுண்டிந்திர தேவரா தியர்களை
ஆதரித் தன்பு தந்தாய்
ஐயனே மலையத்து வஜதுமரி தன்னையும்
அன்பாக வே மணந்தாய்
கோலமாய் முடிசூடிக் கடல்சூழ்ந்த உலகமொரு
குடைநிழற் றன்னி லாண்டாய்
குண்டோதரன்பசிக் கன்னமும் வைகையும்
குறைபா தமைத்து வைத்தாய்
காலனும னந்தளர்ப தஞ்சலிமு னிவர்தொழக்
கான்மா றியே நடித்தாய்
காரணா பூரணா நீரணி கடவுளே
கடையனை யென்னை யாள்வாய்

சூலமே கைக்கொண்டு நடனமா டியதேவ
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
சோமசுந் தரக் கடவுளே.

---

80. மாதாபி தாதுரோகி யாய்வந்த வேதியன்
மாபாவம் நீக்கி வைத்தாய்
மதமீறி யேவந்த யானையின் கருவமதை
மலையாக மாற்றி வைத்தாய்
வாதான பெண்களின் துயர்தீர லிங்கமொடு
வன்னியுங் கிணறு மானாய்
வந்தியின் கவலையறக் கூலிக்குப் பிட்டுண்டு
மண்சுமை பைச்சு மந்தாய்
தீதான சமணர்பசுக் கெருவமும டக்கியே
சித்தனாய் விளையாடினாய்
திரமுடைய பன்றியின் குட்டிகளை ரட்சித்த
சின்மயா னந்த குருவே
சூதாயி ருக்காமல் இவ்வேளை வந்துகா
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
சோமசுந் தரக் கடவுளே.

---

81. பங்கமில் லாததோர் பத்திரன் நன்மைபெறப்
பாரினில் விறகு விற்றாய்
பக்தியாய்ச் சரணென்ற வரகுணன் நாணவே
பரலோக மிங்கழைத்தாய்
சங்கம்வி ளங்கிடப் பலகைதந் தவர்களின்
சஞ்சலம கற்றி வைத்தாய்
சதுர்மறையி னுட்பொருளை முனிவர்நால் வர்க்கோதிச்
சந்தேகந் தீர்த்து வைத்தாய்
மங்கையாள் துயரமத கற்றிடச் சபைதனில்
மாமனாய் வழக்குரைத்தாய்
மாணிக்கம் விற்றுமே அபிஷேக னைக்காத்த
மகதேவ என்னை யாள்வாய்
துங்கவத னக்கிளி உமையவள் பாகனே
சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
சோமசுந் தரக் கடவுளே.

---

82. வாடியே வந்ததொரு நாரைக்கு னன்பதனை
வளர்வித்து முக்தி தந்தாய்
வாதவூ ரடிகளை யாளாக்கி ரட்சித்து
வள்ளலே அடிமை கொண்டாய்

தேடியே யுன்பதஞ் சரணென்ற பாணனுடைத்
 தீவினைய கற்றி வைத்தாய்
தேவேந்திரன் பழியைத் தீர்த்துமே ஊர்க்குருவி
 சித்தமதை யுங்க வர்ந்தாய்
நாடியே தாய்தந்தை சகலமும் நீயென்று
 நம்பினேன் கருணை வாழ்வே
நாதாந்த வெள்ளமே வேதாந்த மோனமே
 நஞ்சையுட் கொண்ட பரமே
சூடினே னென்சிரம் நின்பாத புட்பங்கள்
 சுத்தசை தன்ய வாழ்வே
சுந்தரந் திகழ்மதுர பாஸ்கரன் புகழ்துதிகொள்
 சோமசுந் தரக் கடவுளே.

கிஸ்கேபுராசஞ்சார்கிஸீஸே என்ற வர்ணமெட்டு.

83. இராகம்.இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

மங்களம்.

மதகஜ கணநாதா ஜெயஜெய
மங்களமேஜெய மங்களமே ஜெய
 (மதகஜ)
முதல்மறைகுண நீதா ஜெயஜெய
மங்களமேஜெய மங்களமே ஜெய
 (மதகஜ)

சதமலர் சுகவாணி சதுர்முகனின்கல்யாணி
இதமுறு சூலபாணி ஈன்றகுகனைப்பேணி
நிதமதுரையாள் ராணி ஜெய ஜெய
மங்களமே ஜெய மங்களமே ஜெய

(மதகஜ)

தேவரோடசுரர்கள் சித்தர்முனிவர்புகழ்
மூவரோடகமகிழ் முகுந்தன்லட்சுமிதிகழ்
தேவியேசரணம் மா ஜெய ஜெய
மங்களமே ஜெய மங்களமே ஜெய

(மதகஜ)

ஆலவாயுறுபத்து மூவர்களை நினைந்து
ஏவல்செய்வேன்பதினெண் சித்தர்தாள்புனைந்து
பாவலர் பதம்பணிந்து ஜெய ஜெய
மங்களமே ஜெய மங்களமே ஜெய

(மதகஜ)

அப்பர்சுந்தரர்மாணிக்கர் அருட்பாச்சொல்ராமலிங்கர்
நற்பட்டணத்தார் தாயுமானவரருணகிரி
ஒப்புங்குணங்குடியார்க்கும் ஜெய ஜெய
மங்களமே ஜெய மங்களமே ஜெய

(மதகஜ)

கற்பகத்தருப்பூமி கமழும் மதுரவாமி
ஒப்புர்தெய்வேந்திரநேமி யுத்தமகுலநேமி
செப்பும்பாஸ்கரசாமி ஜெய ஜெய
மங்களமே ஜெய மங்களமே ஜெய

(மதகஜ)

இராஜவாழ்த்து.

தாஜராஜ என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

நீதியான சாட்சிபிரிட்டிஷ் ராஜரீகமே-சத்யம்
நேமிக்கும் பாஸ்கர சாமிக்கும் பூமிக்கும் நீடும்யோகமே
நித்தியம்நம்புத பாலுந்தந்தியும் வித்தியாரம்பஹைஹஸ்கூல்
நேர்த்தியாங்காலேஜ் வைத்தியசாலை நேர்மையின் சுகமிக்கால்
நினைக்குமுன்செல்ரயில் கப்பல் மோட்டார்கார் நிலைத்திட
வே கண்டோம்
நிலைத்திடவே கண்டோம் நிலைத்திடவேகண்டோம்
நலத்துடன் மகிழ்கொண்டோம் (நீதியான)

கூடியசீக்கிரம் இதன் இரண்டாம்பாகம்
வெளிவரும்.

விருத்தம்.

அருள் வாக்கை யுடையதோ ரெளவை யல்ல
அன்னைசரஸ்வதிகடாக்ஷக் கம்பனல்ல
திருவாக்குக் கவிபொழியும் மேகமல்ல
சிறந்தபேர் பெற்றபுக ழேந்தியல்ல
குருவாக்கை யுடையவொரு சீடனல்ல
குழந்தைமுரு கேசனருள் கொண்டுயானுஞ்
சிறுவாக்கா லுரைத்தவொரு புன்சொலெல்லாம்
ஜெகத்திலுள்ள பெரியோர்கள் பொறுப்பர்மாதோ.

வெண்பா.

பாவின் சுவைபதனைப் பாவலர்க டாமறிவர்
நாவாற் சுவைபதனை நாமறிவோம்—பூவின்
மணத்தை நுகர்ந்தார் மறப்பரோ வல்லாக்
குணத்தாருக் கேதக் குறி.

பக்திரஸ கீர்த்தனங்கள் முற்றுப்பெற்றது.

கன்னிச்சமீன் சரபம்
உடுமலை முத்துசாமிக்கவிராயரியற்றிய
இராமாயண நவீனநாடகம் வெளிவந்து
விட்டது விலை ரூபா 2.

வந்து விட்டது! உ வந்து விட்டது

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள, கன்னிச்சமீன் சரபம்,

உடுமேலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு!! முந்துங்கள்!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாரியார்த்த சித்திபெறச் செய்வதும், நம்மவர்களின் ஆதி இதிகாச புராண காவியமானதும் ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச்செய்து, உலகத்தை இன்புறச்செய்திருக்கிறார்கள் எனினும், அவை "தற்கால நாகரீகத்திற்கு அநுகூலமானவையல்ல" என்பது நன்கறிந்ததே.

தற்காலம் நாடெங்கும் ... நாடகத்தார் முதலிய நண்பர் பலரும் விரும்பியவண்ணம், சிருங்காரம், வீரம், சோகம் என்ற ஒவ்வொரு பாகங்களின் சமயத்திற்கு ... வாறு இந்துஸ்தான், பார்ஸி, கெஜல், டோமரி, தில்லானா, டப்பா, திருப்புகழ், வண்ணம் முதலிய பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப்பிரத்யக்ஷமாக நடைபெறுவது போலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் மேற்கண்ட சாதுரிய மாதுரிய, சரபம் முத்துசாமிக்கவிராயரவர்களா லியற்றப்பெற்று, உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரித்துச்சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கிறோம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசனசாதுர்யங்களின் அருமையும் நவரசபூர்த்தியாகவேயிருக்கும். சிறக நாடெங்கும் புகழ்பெறும் பாடல்களில் முதன்மையுற்றதும், மகிமைபெற்றதும் இதுதான்! இதுதான்!! என்பது புத்தகத்தைவாங்கி வாசிக்கும் நேயர்களுக்கே நன்குவிளங்கும். முந்தினவர்களுக்கன்றிப் பிந்தினவர்களுக்ககப்படுவதரிது.

விலை ரூ. 2.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம்,

மதுரை.